**கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டம் - 2017**

கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 செப்தெம்பர் 03 ஆந் திகதிய எஸ்எல்-பீ 90 ஆம் இலக்க துணைநிலைக் கடன் உடன்படிக்கையின் IV ஆவது உறுப்புரையின் 4.03(ஏ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஜசீ) இடையே கைசாத்திட்ட 2007 மார்ச் 28 ஆந்திகதிய எஸ்எல்-பீ90 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய நதர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. புதிய அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதன் மூலம் கொழும்பு நகரம் மற்றும் கொட்டியாவத்தை - முல்லேரியாப் பகுதியின் நீர் வழங்கலை புனரமைத்து தரமுயர்த்தல் மற்றும் மாளிகாகந்தையில் புதிய நீர்த்தேக்கம், எலி ஹவுஸ்சில் நீர் தேக்கம் நிர்மாணித்து கொட்டியாவத்தை மற்றும் முல்லேரியாவில் நீர் வழங்கல் முறைமையை முன்னேற்றுதல் மற்றும் கொழும்பு நகரத்தில் தெரிவு செய்யப்பட்ட தோட்டங்களில் வாடகை நீர் இணைப்பை வழங்கல் என்பனவே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,785 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 5,359 மில்லியனானதுடன் அதில் ரூபா 3,549 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 3,975 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி தொகை ரூபா 1,236 மில்லியனிற்குச் சமமான ஜ.ஜென் 1,384 மில்லியன் இலங்கை அரசாங்கம் நிதியளிக்க வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2007 நவம்பர் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 சனவரி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்ட காலம் 2017 யூன் 20 வரை 02 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி

அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு**

2017 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 481.11 மில்லியன் கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாக்குவதிலுள்ள தாமதம் காரணமான செயற்திட்டத்தின் காலப்பகுதி இரண்டு தடவை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், மிகுதி நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் மீதான செலவினை செய்வதற்கு 2015 யூன் 20 இல் கடன் முடிவுறுத்தலின் பின்னர் ஒப்பந்தகாரரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு ரூபா 346.59 மில்லியன் தொகை மாற்றப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவற்றிற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு பொறிமுறை பிரகாரம், ஒப்பந்தகாரர் கொடுப்பனவு விபரங்களுடன் செயற்திட்டத்திற்கு மாதாந்த வங்கி கூற்று சமர்ப்பிப்தற்கு வேண்டப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் உரிய வங்கிக் கணக்கின் மாதாந்த வங்கிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்ப சபையின் நிதிக் கூற்றின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வெலை ரூபா 3,396.95 மில்லியனாகும். எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வெலைகளின் நேரொத்த பெறுமதி ரூபா 3,393.55 மில்லியனாகும்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.ஜென் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஜேஐசீஏ | 3,975 | 3,549 | இல்லை | இல்லை | இல்லை | 3,138.00 | 4,152.00 |
| இலங்கை அரசாங்கம் | 1,384 | 1,236 | இல்லை | 11.12 | 14.56 | 858.26 | 1,135.60 |
| **மொத்தம்** | **5,359** | **4,785** | இல்லை | **11.12** | **14.56** | **3,996.26** | **5,287.60** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், கடன் உடன்படிக்கையில் செய்யப்பட்ட ரூபா 3,549 மில்லியனிற்கு சமமான ஜப்பான் ஜென் 3,975 மில்லியன் ஒதுக்கீடகளில், ரூபா 4,152 மில்லியனிற்கு சமமான யப்பான் ஜென் 3,138 மில்லியன் மாத்திரம் செயற்திட்டத்தின் உடன்படிக்கை திகதியிலிருந்து 10 ஆண்டுகளின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் எவ்வித நிதிகளும் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 14.56 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் கீழ் கட்டிடம் மற்றும் நீர்த்தேக்கத்தின் நிர்மாணம் மற்றும் தண்ணீர் இணைப்புகள் வழங்கல் என்பன மீளாய்வாண்டு இறுதியில் கணிசமானளவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 முன்னைய கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் செய்யப்பட்ட பின்வரும் அவதானிப்புகள் மீளய்வாண்டு இறுதிவரையும் தீர்வு காணப்படாது இருந்தது.

(அ) வீதி சீர்படுத்தல் வேலைகளிற்காக 2013 இல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இடப்பட்ட ரூபா 11.90 மில்லியன் பெறுமதியான மீளளிக்க வேண்டிய வைப்புக்கள் மீளளிக்கவேண்டிய வைப்புக்களின் தகுதிக்காலம் காலாவதியான போதிலும் 2017 திசெம்பர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டமானது குத்தகை உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடாமல் தண்ணீர் கோபுரம் மற்றும் அலுவலக கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக 2001 இல் கொலன்னாவ பிரதேச செயலகத்திடமிருந்து குத்தகை உடன்படிக்கை அடிப்படையில் காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 5.17 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது.

**3.4 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்**

---

நிதி மற்றும் திட்டமில் அமைச்சின் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நாளதுவரையாக்கப்பட்ட வழியில் செயற்திட்டத்தால் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.